[2017 ஜூலை 3

முற்பகல் 11-20

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் குட்கா சம்பந்தமான பிரச்சினை பற்றி அவையில் எழுப்புவதற்கு தாங்கள் அனுமதி மறுக்கிற காரணத்தால் இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. முஹம்மது அபூபக்கர், திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்புக்கு வராது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

கதிராமங்கலத்தில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்தின் ஆழ்துளைக் கிணறு குழாய்களில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. கதிராமங்கலத்தில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் ஆழ்துளைக் கிணறு குழாய்களில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள், முனைவர் கோவி. செழியன், திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. துரை. சந்திரசேகரன், திரு. எம். இராமச்சந்திரன் ஆகியோரும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கரி. இராமசாமி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோரும் குறித்து பேரவை விதி 56 மற்றும் 55-ன்கீழ் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

***முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கதிராமங்கலத்தில் ஓ.என்.ஜி.சி.*

2017 ஜூலை 3] **[முனைவர் கோவி. செழியன்]**

நிறுவனத்தினுடைய குழாய்களில் உடைப்பு ஏற்பட்டதால், தீப்பிழம்பாக வெளிப்பட்டது. அச்ச உணர்வு காரணமாக எதிர்த்துப் போராடிய விவசாயிகள், பொதுமக்கள்மீது அடிதடியில் ஈடுபட்டு, காவல் துறையினர் தடியடி நடத்தி, கைது செய்திருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்து, அந்தக் கிராமத்தில் முற்றுகையிட்டுள்ள போலீசாரை வெளியேற உத்தரவிட வேண்டுமாய் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கதிராமங்கலத்தில் நிலவும் பெட்ரோல், டீசல் கலந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து, பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மீதும், பேராசிரியர் ஜெயராமன் மீதும் போடப்பட்டிருக்கிற வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதோடு, ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் பணிகளால் மக்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தி, அதை உறுதிப்படுத்தித் தரவேண்டுமாயும், இந்த அரசை எதிர்க்கட்சித் தலைவர், தளபதி அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். எனவே, ஓ.என்.ஜி.சி. பணியை அறவே தடுத்து நிறுத்த தமிழக அரசு முன்வருமா, வழக்குகளை வாபஸ் பெறுமா, போலீசை வெளியேற்றுவீர்களா என்பது குறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து, என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கதிராமங்கலத்திலே ஓ.என்.ஜி.சி.-க்குச் சொந்தமான கச்சா எண்ணெய் எடுத்து வரும் வழியிலே குழாயிலே உடைப்பு ஏற்பட்டு, பெருவாரியான கச்சா எண்ணெய் வெளியேறியிருக்கிறது. கச்சா எண்ணெய் வெளியேறினால் அந்தப் பகுதியிலே நிச்சயமாக ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்படும் என்பது நமக்குத் தெரியும். இப்பொழுதுகூட ஒரு வெளிநாட்டிலே, சென்றுகொண்டிருந்த ஒரு டேங்கர் லாரி கவிழ்ந்து அதிலே தீப்பிடித்து, அநேகமாக 100 பேர்களுக்கும் மேலாக இறந்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே, அந்தக் கிராமத்து மக்கள் பதட்டத்துடன் இருந்ததால் அதை எவ்வாறு தடுப்பது என்பது தெரியாமல் அதிகாரிகளுடன் பிரச்சினை நடந்திருக்கிறது. அதற்காக அந்தக் கிராமத்து மக்கள், விவசாயிகள்மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன.*

அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தடியடிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் அரசு பரிசீலித்து அவர்கள்மீது தொடர்ந்திருக்கின்ற வழக்கை நீங்கள் திரும்பப் பெற வேண்டும். அவர்களை தடியடி செய்த அதிகாரிகளின்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கோரிக்கையை உங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முஹம்மது அபூபக்கர், திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் அறிவிப்பு கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் 10-55 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, என்னை பேச விடுங்கள் என்று கேட்டீர்களென்றால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. நீங்கள் அவை தொடங்குவதற்கு முன்பு என்னுடைய அறையில் வந்து கொடுத்தால், நான் அதைப் பரிசீலிக்கலாம். (குறுக்கீடுகள்) இப்போதெல்லாம் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-25

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கதிராமங்கலம் கிராமத்தில் 1-6-2001 முதல் வழங்கப்பட்ட சுரங்க குத்தகை உரிமத்தின் அடிப்படையில் தனியார் சிலருக்குச் சொந்தமான நிலத்தை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் (ONGC) குத்தகைக்கு எடுத்து, கச்சா எண்ணெய் எடுத்து வருகிறது. இதுநாள் வரையில் இந்த இடத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் பணிகள் நடைபெற்று வந்தன. இதற்கிடையே, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் கடந்த 18-5-2017 அன்று முதல் மேற்படி ஆழ்துளைக் கிணற்றில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்களை அங்கு கொண்டு சென்றுள்ளது.

இதனையறிந்த அப்பகுதி கிராம மக்கள், மேற்படி பணிகள் மீத்தேன் எடுப்பதற்கான ஆயத்தப் பணிகள் என்று கருதி, 19-5-2017 அன்று அப்பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ONGC அலுவலகம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இப்பிரச்சினை தொடர்பாக கும்பகோணம் சார் ஆட்சியாளர் 25-5-2017, 27-5-2017 மற்றும் 31-5-2017 ஆகிய நாட்களில் கிராம மக்கள் மற்றும் ONGC நிறுவனத்தினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தியதில் கிராம மக்கள் அந்நிறுவனத்தின் விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாததால், பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றது.

இந்நிலையில் கடந்த 2-6-2017 அன்று ONGC நிறுவனம் மாவட்ட நிருவாகத்திற்குத் தகவல் தெரிவித்துவிட்டு, காவல் துறை பாதுகாப்புடன் மேற்படி கிணற்றில் பராமரிப்புப் பணிகளைத் துவக்கியது. இதனையறிந்த மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு தலைமை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமன் மற்றும் 9 நபர்கள் பராமரிப்புப் பணிகளைத் தடுக்க முற்பட்டபோது, கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து, கிணற்றின் அருகே கூடிய கிராம மக்கள் சுமார் 93 பேரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட ஜெயராமன் மற்றும் 9 நபர்கள் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டதோடு, மற்றவர்கள் காவல் நிலையத்திலேயே பிணையில் விடுவிக்கப்பட்டனர். நீதிமன்றக் காவலுக்குட்படுத்தப்பட்ட ஜெயராமன் மற்றும் 9 பேர் 6-6-2017 அன்று பிணையில் வெளிவந்தனர்.

கடந்த 5-6-2017 அன்று மீண்டும் கதிராமங்கலம் கிராம மக்கள் 400 பேர் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி அக்கிராமத்தில் சாலை மறியலில் ஈடுபட்டபோது, வருவாய் மற்றும் காவல் துறையினர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைதியாக கலைந்து போகச் செய்தனர்.

இதற்கிடையில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தினர் 2-6-2017 முதல் மேற்படி கிணற்றில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் 30-6-2017 அன்று காலை, கதிராமங்கலம்-பந்தநல்லூர் சாலையில் வனதுர்கை அம்மன் கோவில் அருகே உள்ள தனியார் தரிசு நிலம் ஒன்றில் செல்லும் எண்ணெய் மற்றும் எரிவாயுக் குழாயில் கசிவு இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழக அதிகாரிகள், வருவாய் மற்றும் காவல் துறையினர் அவ்விடத்திற்கு விரைந்து சென்றனர்.

அதற்குள் கதிராமங்கலத்தைச் சேர்ந்த கிராம மக்கள் சுமார் 150 பேர் அவ்விடத்தின் அருகே கூடி, சாலையில் அமர்ந்து

எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழக அதிகாரிகளை அவ்விடத்திற்குச் செல்லவிடாமல் தடுத்ததுடன், மாவட்ட ஆட்சியர் நேரில் வரவேண்டுமென வலியுறுத்தினர். மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் காவல் துறை அதிகாரிகள் எடுத்துக் கூறியும் கேளாமல், எரிவாயு குழாய்க் கிணறு ஒன்றின் அருகில் சாலையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த வைக்கோல் போர் உள்ளிட்ட பொருட்களுக்குத் தீ வைத்ததுடன், அவர்களுள் சிலர் காவல் துறையினர்மீது கற்களை வீசித் தாக்கினர்.

இத்தாக்குதலில், ஒரு காவல் ஆய்வாளர் மற்றும் இரு காவலர்கள் மற்றும் கதிராமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்ததுடன், காவல் துறைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றும் சேதமடைந்தது. காவல் துறையினர் கிராமத்தினரை அமைதியாகக் கலைந்துபோக அறிவுறுத்தியும், அவர்கள் அதனை பொருட்படுத்தாமல் தொடர்ந்து கற்களை வீசி வன்முறையில் ஈடுபட்டதால், குறைந்த அளவு பலப்பிரயோகம் செய்து அவர்களைக் கலைந்துபோகச் செய்தனர். பின்னர், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தினர் எரிவாயு இணைப்பினைத் துண்டித்தனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, பத்து பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தற்போது, கதிராமங்கலம் கிராமத்தில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நிலைமை அமைதியாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

காட்பாடி, தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனப் பணியாளர்களுக்கு சம்பள நிலுவைத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நாளைக்குப் பார்க்கலாம்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .